# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 198/ந/2025, நாள் 19.12.2025

S. அன்பழகன்,
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
முசிறி நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 29.05.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.06.2025 அன்று பெறப்பட்டு, 198/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 29.05.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“நான் எனது சொந்த வேலை காரணமாக 20.03.2025 அன்று முசிறி சென்ற போது முசிறி புதிய பேருந்து நிலையம் எதிரில் 117/6 இல் வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் பேசன்ஸ் நிறுவனமும், B.K. சுபஸ்ரீ கட்டிட ஒப்பந்தகாரர் அலுவலகமும் அமைந்துள்ள கட்டிடத்தை பார்த்து எனக்கு வியப்பும் விந்தையும் ஏற்பட்டது. ஏனென்றால் நகராட்சி பகுதிகளில் 12 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்கிற விதியை மீறி தரைதளம் தவிர்த்து 4 மாடி கட்டிடம் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் சுமார் 15000 சதுர அடி பரப்பளவில் 117/6 இல் வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர்

பேசன்ஸ் B.K. சுபஸ்ரீ கட்டிட ஒப்பந்தகாரர் அலுவலகமும் இணைந்த கட்டிடம் புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் பேருந்துகள் பேருந்து நிலையம் உள்ளே செல்லும் பாதைக்கு எதிரில் கட்டப்பட்டுள்ளது. மேலும் தற்போது தான் புதிதாக 4 மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் அந்த கட்டிடத்தில் பல நிறுவனங்கள் வாடகைக்கு வரும் சூழ்நிலையில் பார்க்கிங் வசதி செய்யப்படாமல் கட்டப்பட்டுள்ளது. எனவே 117/6 இல் புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள கட்டிடத்தை இட நேராய்வு செய்து கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது தெரிய வந்ததால் உடனடியாக விதிமீறி செயல்படும் மேற்கூறிய கட்டிடத்தை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படி இடித்து அகற்றுமாறு பொது நலன் கருதி நான் முசிறி நகராட்சி ஆணையருக்கு 24.03.2025 இல் புகார் அனுப்பி அதனை அவர் 25.03.2025 இல் பெற்று கொண்டு ஒப்புதல் சான்று வந்துள்ளது.

நான் ஆணையருக்கு அளித்துள்ள புகாரிலேயே புதிதாக கட்டிடப்பணி தொடங்கும் இடங்களை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குனர் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறி உள்ள அறிவுரைகளை நகரமைப்பு ஆய்வாளர்கள் பின்பற்றாவிட்டாலும் பரவாயில்லை, அதை கண்காணிக்க வேண்டிய ஆணையரும் கடைபிடிக்காத காரணத்தால் தான் தற்போது விதிமீறி 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 117/6 இல் செயல்படும் கட்டிடம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளதை சுட்டி காட்டி இருந்தேன்.

மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மவுலிவாக்கம் கட்டிட வழக்கில் மிக தெளிவாக விதிமீறிய கட்டிடங்கள் அனைத்தையும் இடிப்பதுதான் சட்டம் என்றும், குறைபாடுகளை சரிசெய்து கொள்ளலாம் என்று இருக்ககூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளதையும், அதே போன்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் அனைத்து விதிமீறல் தொடர்பான வழக்குகளிலும் கூறியுள்ளதையும் சுட்டி காட்டியதோடு, திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் விதிமீறல் கட்டிடத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளதையும் நான் ஆணையருக்கு அளித்த புகாரில் குறிப்பிட்டிருந்தேன்.

சமீபத்தில் தஞ்சாவூரில் விதிமீறி செயல்பட்ட ஜவுளி கடையை 72 மணி நேரத்தில் இடித்து அகற்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பித்ததையும் ஆணையருக்கு புகாரில் சுட்டி காட்டி இருந்தேன்.

மேலும் நான் எனது புகாரிலேயே ஆணையர் அவர்கள் அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை கடைபிடிக்காவிட்டாலும், விதிமீறல் தொடர்பான அனைத்து கட்டிட வழக்கிலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுகளை அறிந்தும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்திடம் பயமோ, மரியாதையோ இன்றி செயல்பட்டு மாண்புமிகு உயர்நீதின்றத்திற்கே சவால் விடும் விதமாகத்தான் 117/6 இல் உள்ள கட்டிடத்திற்கு 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம் கட்ட அனுமதித்ததோடு பார்க்கிங் வசதியின்றி செயல்படுவதற்கும் அனுமதி வழங்கி இருப்பதாக தெரிய வருகிறது என்று குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் எனது புகாரில் சட்டப்படி 117/6 இல் உள்ள கட்டிடத்தை இடநேராய்வு செய்து கட்டிடம் விதி மீறி கட்டப்பட்டுள்ளது தெரிய வந்தால் உடனடியாக மாண்புமிகு உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி இடித்து அகற்றுவதோடு, தலைமை செயலாளர் கூறிய அறிவுரையை பின்பற்றி என் புகார் மனு மீது எடுத்த நடவடிக்கையை 30 நாட்களுக்குள் வழங்குமாறு கேட்டிருந்தேன். இவ்வளவு விவரமாக, தெளிவாக சிறுபிள்ளைக்கு புரியும்படி நான் ஆணையருக்கு புகார் கொடுத்தும் இதுவரை என் புகார்மீது எவ்வித நடவடிக்கையும் ஆணையர் எடுக்காததில் இருந்து ஆணையர் விதிமீறிய கட்டிடத்திற்கு ஆதரவாக உள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணமாகிறது.

எனவே மாண்புமிகு நீதிபதி அந்தஸ்தில் உள்ள மரியாதைக்குரிய தாங்கள் என் புகார் மீது மனுநீதிச் சோழன் போல் நீதி வழங்கும் பொருட்டு மதிப்புமிக்க தங்களின் நேரடி பார்வையில் சிறப்பு விசாரணை குழு அமைத்து முசிறியில் உள்ள 117/6 இல் வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் செயல்படும் கட்டிடத்தை இடநேராய்வு செய்து நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி உத்தரவை ஆய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுப்பதோடு, தவறு செய்த நகராட்சி ஆணையர் மீது நியாயப்படி, சட்டப்படி கடும் நடவடிக்கை எடுத்து சட்டத்தை காப்பாற்றுமாறு மிகவும் தாழ்மையுடன், பணிவுடன், வேண்டி, விரும்பி கீழ்ப்படிந்து கேட்டுக் கொள்கிறேன்" எனத்தெரிவித்துள்ளார்.

2. மனுதாரது புகார் குறித்து துறையூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 17.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. முசிறி நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.505/2025/எப்1, நாள் 08.07.2025 மற்றும் 28.08.2025 நாளிட்ட அறிக்கைகளில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"VEERAN FASHIONS வளாகம் தரைத்தளம், முதல்தளம், இரண்டாம்தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளக்கட்டிடம் 2023–ம் ஆண்டில் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தரைத்தளத்தில் VEERAN FASHIONS ஜவுளிக்கடை, B.K. சுபஸ்ரீ கட்டிட கான்ட்ராக்டர் அலுவலகமும், முதல்தளத்தில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி நிறுவனமும், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில் தங்கும் அறைகள் கட்டிடமாகவும் செயல்பாட்டில் உள்ளது. வாகனம் நிறுத்துவதற்கென இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மேற்படி இடத்தில் (சர்வே எண்.87/4A) ஸ்டில்ட் தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் வணிக உபயோகக் கட்டிடம் கட்டுவதற்கு இவ்வலுவலக கட்டிட உரிமையாணை எண்.190/BL/2023/00027, நாள் 15.05.2023–ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அனுமதி அளிக்கப்பட்டுள்ள வரைபடத்திற்கு மாறுதலாக தரைத்தளம், முதல்தளம், இரண்டாம்தளம், மூன்றாம் தளங்களில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. நான்காம் தளத்தில் ஒருபகுதியில் மட்டும் அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும், வரைபடத்தில் வாகனம் நிறுத்துவதற்கென 710.00 சதுரடி இடம் ஸ்டில்ட் தளத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஸ்டில்ட் தளம், தரைத்தளமாக மாற்றம் செய்யப்பட்டு வாகனம் நிறுத்தத்திற்கு பயன்படுத்தப்படாமல் வணிக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அனுமதிக்கு மாறான மற்றும் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, (திருத்தப்பட்ட சட்டம் 35/2022)ன் கீழ் அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையர் மற்றும் வீரன் பேசன்ஸ் நிறுவன உரிமையாளர் ஆகியோரை 31.07.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. S.அன்பழகன் என்பவர் 31.07.2025 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராக இயலவில்லை என தெரிவித்து விசாரணையை ஒரு மாதத்திற்கு

ஒத்திவைக்குமாறு தனது 26.07.2025 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் வீரன் பேசன்ஸ் நிறுவன உரிமையாளரும் தனது நாளிடப்படாத கடிதத்தில் தனது வயது முதிர்வின் காரணமாக உடல்நிலை சரியில்லாததால் தன்னால் 31.07.2025 அன்றைய விசாரணையில் ஆஜராக இயலவில்லை என தெரிவித்து தனக்கு மாற்று தேதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மனுதாரர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் கோரிக்கைகளை ஏற்று மேற்படி விசாரணை 02.09.2025க்கு ஒத்திவைக்கப்பட்டு விசாரணைக்கான அழைப்பாணைகள் மனுதாரருக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் 30.07.2025 அன்று அனுப்பப்பட்டன.

6) மனுதாரர் திரு. S. அன்பழகன் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் 02.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக கலந்து கொண்டு தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"முசிறி புதிய பேருந்து நிலையம் எதிரில் எண். 117/6–ல் செயல்பட்டு வரும் வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் பேசன்ஸ் நிறுவனமும், B.K.சுபஸ்ரீ கட்டிட ஒப்பந்தகாரர் அலுவலகமும் அமைந்துள்ள கட்டிடம் 12 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்கிற விதியை மீறி 4 மாடி கட்டிடம் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் சுமார் 15000 சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் பேருந்துகள் உள்ளே செல்லும் பாதைக்கு எதிரில் கட்டப்பட்டுள்ளது. புதிதாகக் கட்டப்பட்டுள்ள 4 மாடி கட்டிடத்தில் பல நிறுவனங்கள் வாடகைக்கு வரும் சூழ்நிலையில் பார்க்கிங் வசதி செய்யப்படாமல் கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்தை நேராய்வு செய்து மாண்பமை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் அரசு விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை இடித்து அகற்றவும், இதுகுறித்து ஏற்கனவே அளிக்கப்பட்ட என் புகார் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

7) மேலும் திரு.S.அன்பழகன் என்பவர் விசாரணையின்போது சமர்ப்பித்த 02.09.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"முசிறி பேருந்து நிலையம் எதிரில் இயங்கி வரும் வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் கட்டிடம் சுமார் 15,000 சதுர அடியில் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் ஏதும் விடாமல் Tamil Nadu Combined Development and Building Rules–படி கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் காலி இடம் விடாமல் (set back) கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட காலி இடம் (set back) விடாமல், எதிர்பாராத விதமாக ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் அதை தடுத்து அணைக்க முடியாத சூழ்நிலையில் வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் அமைந்துள்ள கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதுவும் 4 மாடி விதி மீறி கட்டப்பட்டுள்ளது.

மேலும் ஆணையர் உச்சநீதிமன்ற உத்தரவு, உயர்நீதிமன்ற உத்தரவு இரண்டையும் அறிந்தும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கே சவால் விடும் விதமாகத்தான் விதியை மீறி 15 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம் கட்ட வீரன் மென்ஸ் வேர் அமைந்துள்ள கட்டிடத்திற்கு அனுமதி வழங்கி உள்ளார். எனவே இத்தகைய சூழ்நிலையில் அதுவும் தலைமை செயலாளர் அறிவுறுத்தல்படி 30 நாட்களுக்குள் என் புகார் மீது ஆணையர் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் முசிறி நகராட்சி ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் விதி மீறிய வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் அமைத்துள்ள கட்டிட நிர்வாகியை எப்படியும், எப்பாடுபட்டாவது காப்பாற்றும் நோக்கத்தோடு பொய்யாக இருக்கும்.

எனவே, என் புகார் மீது மாண்புமிகு நீதிபதி அந்தஸ்தில் உள்ள மரியாதைக்குரிய தாங்கள் மனுநீதிச்சோழன் போல் நீதி வழங்கும் பொருட்டு மதிப்புமிக்க தங்களின் நேரடி பார்வையில் சிறப்பு விசாரணைகுழு அமைத்து முசிறியில் உள்ள வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் கட்டிடத்தை இட நேராய்வு செய்து வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் கட்டிடம் கட்டிட வரைபடத்தில் பார்க்கிங்கென்று எவ்வளவு இடம் காண்பித்துள்ளார்கள் என்பதையும் TNCDBR சட்டப்படி கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் காலி இடம் விடப்பட்டிருக்கின்றதா என்பதை கண்டறிந்து கட்டிடத்தை சுற்றி எவ்வளவு இடம் விடப்பட்டுள்ளது என்பதையும் கண்டறிந்து கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்டி, கட்டிட நிறைவுச்சாற்று (Building completion certificate) பெறப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து வீரன் மென்ஸ் & கிட்ஸ் வேர் கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199–12200/2025 நாள் 30.04.2025–ன்படி இடித்து அகற்றுமாறும், நான் புகாரில் கூறியது பொய் என்றால் என் மீது எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவோடு தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்".

8) எதிர் மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையர் 02.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு சமர்பித்துள்ளார்.

"முசிறி நகராட்சி உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் VEERAN FASHIONS வளாகம் நான்கு தளங்களாக 2023–ம் ஆண்டில் கட்டப்பட்டது. தரைத்தளத்தில் VEERAN FASHIONS ஜவுளிக்கடையும், B.K. சுபஸ்ரீ கட்டிட கான்ட்ராக்டர் அலுவலகமும், முதல்தளத்தில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி நிறுவனமும், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில் தங்கும் அறைகளாகவும் செயல்பட்டு வருகின்றது. இக்கட்டிடத்தில் வாகனம் நிறுத்துவதற்கென இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மேற்படி, இடத்தில் (சர்வே எண்.87/4A) ஸ்டில்ட் தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் வணிக உபயோகக் கட்டிடம் கட்டுவதற்கு இவ்வலுவலக கட்டிட உரிமையாணை எண்.190/BL-2023-00027, நாள் 15.05.2023–ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக தரைத்தளம், முதல்தளம், இரண்டாம்தளம், மூன்றாம் தளம் கட்டப்பட்டுள்ளது. நான்காம் தளத்தில் ஒருபகுதியில் மட்டும் அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும், வரைப்படத்தில் வாகனம் நிறுத்துவதற்கென 710.00 சதுரடி இடம் ஸ்டில்ட் தளத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அனுமதிக்கு மாறாக ஸ்டில்ட் தளம், தரைத்தளமாக மாற்றம் செய்யப்பட்டு வாகனம் நிறுத்தத்திற்கு பயன்படுத்தப்படாமல் வணிக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அனுமதிக்கு மாறான மற்றும் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, (திருத்தப்பட்ட சட்டம் 35/2022)ன் கீழ் அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்''. என தெரிவித்துள்ளார்.

9) இரண்டாவது எதிர்மனுதாரரான வீரன் ஃபேசன்ஸ் & மென்ஸ் வேர் நிறுவனத்தின் உரிமையாளர் P. சுப்பிரமணியன் சார்பாக திரு. P. பாலகுமார் என்பவர் 02.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் முன்

ஆஜராகி துறையூரைச் சேர்ந்த திரு. S. அன்பழகன் என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனுமீது கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"முசிறி நகராட்சி உட்பட்ட பகுதியில் திரு P. சுப்பிரமணியன் என்பவரால் 16 மீட்டர் உயரமுள்ள வணிக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு வரி விதிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மின் இணைப்பு பெறுவதற்காக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதற்கான சான்று 22.04.2025 அன்று நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. என்பதை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்". என தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி வீரன் பேசன்ஸ் உரிமையாளர் திரு. P.சுப்ரமணியம் என்பவர் தனது நாளிடப்படாத கடித்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"திரு.S.அன்பழகன் என்பவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கட்டிடமானது கடந்த 3 ஆண்டுகாலமாக இயங்கி வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதி முசிறி நகராட்சியில் ஒப்புதல் பெறப்பட்டது. அதற்கான வரைப்பட சான்று அடிமனைபத்திரம் உள்ளூர் திட்டக்குழுமம் முசிறி நகராட்சி திட்ட அனுமதி (பிரிவு 49 நகர் ஊரமைப்பு சட்டம் (1971) 80Aன்படி தங்களிடம் மேல்முறையீடு செய்கிறோம்.

| | |
|---|---|
| கட்டிட விண்ணப்ப எண். | 190/CP/23–240000063 |
| பி.ஏ.எண். | 190/BPA/2023/00055 |
| திட்ட அனுமதி எண். | 30 கிராம நிர்வாக அலுவலர் சான்று<br>கட்டிட வரி ரசீது. |

பட்டா–சிட்டா அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆதலால் எங்கள் கட்டுமானத்தில் தவறு ஏதேனும் இருக்கும்பட்சத்தில் ஐயா தாங்கள் எடுக்கும் விதிகளை நாங்கள் சரி செய்து கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

10) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் 2–ஆம் எதிர்மனுதாரரான வீரன் ஃ பேசன்ஸ் & மென்ஸ் வேர் உரிமையாளர் சார்பாக ஆஜரான திரு. P.பாலகுமார் அளித்த வாக்குமூலம், உரிமையாளரின் கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

திருச்சி மாவட்டம், முசிறி புதிய பேருந்து நிலையம் எதிரில் விதி மீறி கட்டி உள்ள வீரன் மென்ஸ் & கிட்வேர் அமைந்துள்ள கட்டிடத்தை இடித்து அகற்றவும் பொதுநலன் கருதி புகார் கொடுத்தும், நடவடிக்கை எடுக்காமல் விதிமீறிய கட்டிடத்திற்கு உடந்தையாக இருக்கும் முசிறி நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்கவும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மனுதாரரால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள வீரன் பேசன்ஸ் வளாகம், தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளம் 2023–ல் கட்டப்பட்டது என்பதும், தரைத்தளத்தில் வீரன் பேசன்ஸ் ஜவுளிக்கடை, B.K.சுபஸ்ரீ கட்டிட கான்ட்ராக்டர் அலுவலகமும், முதல் தளத்தில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி நிறுவனமும், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில் தங்கும் அறைகளாக செயல்பாட்டில் உள்ளதும், வாகனம் நிறுத்துவதற்கென இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும், மேற்படி இடத்தில் (சர்வே எண்.87/4A) ஸ்டில்ட் தளம்,

முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் வணிக உபயோகக்கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி கட்டிட உரிமையாணை எண்.190/BL/2023/00027, நாள் 15.05.2023ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதும், ஆனால் அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைபடத்திற்கு மாறுதலாக தரைத்தளம், முதல்தளம், இரண்டாம்தளம், மூன்றாம் தளங்களில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதும், நான்காம் தளத்தில் ஒருபகுதியில் மட்டும் அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதும், வபைடத்தில் வாகனம் நிறுத்துவதற்கென 710.00 சதுரடி இடம் ஸ்டில்ட் தளத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும், ஸ்டில்ட் தளம் தரைத்தளமாக மாற்றம் செய்யப்பட்டு வாகனம் நிறுத்துவதற்கென பயன்படுத்தப்படாமல் வணிக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருவதும் மற்றும் அனுமதிக்கு மாறான மற்றும் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022)–ன் கீழ் நகராட்சியால் அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

மனுதாரர் புகார் தெரிவித்துள்ள கட்டிடமானது கடந்த 3 ஆண்டுகாலமாக இயங்கி வருகிறது எனவும், அக்கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதி முசிறி நகராட்சியால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது எனவும், அதற்கான வரைபடச்சான்று அடிமனை பத்திரம் உள்ளூர் திட்டக்குழுமம் முசிறி நகராட்சி திட்ட அனுமதி பிரிவு 49 நகர் ஊரமைப்பு சட்டம், 1971 80–Aன்படி இம்முறைமன்ற நடுவத்திடம் மேல்முறையீடு செய்கிறோம் என முறையீடு செய்துள்ளதாகவும் வீரன் பேசன்ஸ் உரிமையாளர் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதை அறியமுடிகிறது.

இந்நேர்வில் அனுமதிக்கு மாறான மற்றும் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022)ன் கீழ் அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் அனுமதியற்ற/அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டிடங்கள் குறித்த அரசு வழிகாட்டுதல்கள், மாண்பமை உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள முசிறி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.அன்பழகன்,
155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் வட்டம்),
திருச்சிராபள்ளி மாவட்டம் – 621 010.

2) நகராட்சி ஆணையர்,
முசிறி நகராட்சி,
திருச்சிராபள்ளி மாவட்டம்.

3) திரு.P.சுப்ரமணியம், த/பெ.திரு.பழனியாண்டி,
உரிமையாளர், வீரன் ஃபேசன்ஸ் & கிட்ஸ் வேர்,
117/1, பைபாஸ் ரோடு,
முசிறி – 621 211.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

23/12/25
செயலாளர்
23/12/25